1969 மார்ச் 15]

ஆபாச புத்தகங்கள்.

* 305 வினா.—திரு வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைசூர் ராஜ்ய எல்லையில் அச்சிடப்பட்டு 1954-ம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள 'நியூ ஜாலி கிளப்' என்ற ஆபாச புத்தகம் இம் மாநிலத்தில் விற்பனை செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதைத் தடுக்க எடுத்த அல்லது எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி (அ) இல்லை.

(இ) வினா எழாது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இந்த ஆபாசப் புத்தகங்கள் விற்பனைக்கு வந்து கடைகளில் சாதாரணமாக இருக்கும் பத்திரிகைகளோடு கார்ட்டூன் புத்தகங்களும் இருக்கின்றன. ஆகவே, தயவு செய்து இந்தமாதிரியான புத்தகங்களைத் தடுக்க விசேஷ நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: உறுப்பினர் கேட்டிருப்பது, 'நியூ ஜாலி கிளப்' புத்தகம் பற்றிக் கேட்டார்கள், பதில் கொடுத்தேன். விற்பனைக்கு வந்து, அவர்கள் வாங்கிய புத்தகங்களைப் பற்றி எனக்குத் தெரியாது.

'Ombudsman'.

* 306. *Q.*—THIRU A. M. RAJA: Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to introduce the system of 'Ombudsman' in our State?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இல்லை.

திரு. ஏ. எம். இராஜா: தலைவர் அவர்களே, மத்திய சர்க்காரிடமிருந்து, இது சம்பந்தமாக ஏதேனும் குறிப்பு மாநில அரசுக்கு வந்துள்ளதா? அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? எழுதிய பதில் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மக்கள் நலக்காப்பாளர் என்ற குறிப்பு வரவில்லை.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவர் அவர்களே, பெரிய பெரிய அதிகாரிகள், லஞ்ச ஊழல் போன்ற குற்றங்கள் செய்ததாக புகார் வந்தால், அவற்றை விசாரிக்க ஒரு 'ஆம்புட்ஸ்மேன்' இருந்தால்தான், நலமாக இருக்கும் என்பதை சர்க்கார் அறிவார்களா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுதே அவற்றையெல்லாம் கண்டுபிடிக்க ஏற்பாடுகள் இருந்து வருகின்றன.

திரு. கே. விநாயகம்: சார், ஆம்புட்ஸ்மன் ஸிஸ்டம் இங்லாந்தில் தான் முதன் முதலாக அமுலுக்கு வந்து நல்ல பயன் தந்திருக்கிறது. நாங்கள் அது பற்றிப் படித்திருக்கிறோம். அது நல்ல ஸிஸ்டம் (திரு. ஹண்டே: ஸ்வீடனில்) ஆமாம், ஸ்வீடனில் இருந்து வந்தது. அது நல்ல ஒரு ஸிஸ்டமாக இருந்தால், அதைப் பரிசீலித்து, நம் நாட்டிற்கு

உகந்தவகையில் அதை அமைத்துக்கொள்ள, அரசு நல்ல அம்சங்களை ஏற்றுக்கொண்டு—வெளிநாட்டிலிருந்து வருகிறது. ஆகவே, அந்நியப் பொருள் என்று உதாசீனம் செய்யாமல்—செயல்படக்கூடாதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: நமக்கு ஏற்ற வகையில் காரியங்களைச் செய்ய ஏற்பாடுகள் செய்துகொள்ளலாம். அதைப் பின்பற்ற வேண்டிய நிலை இல்லை.

வாரத்தில் ஐந்து நாட்கள் வேலை.

* **307 வினா—திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாரத்திற்கு 5 நாள் வேலை செய்ய விருப்பம் தெரிவித்து செக்ரடிரியேட்டில் உள்ள N. G. G. O.-க்கள் கருத்து தெரிவித்துள்ளனரா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசின் கொள்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) சிலர் தெரிவித்துள்ளனர்.

(இ) இதுபற்றிய செயற்குறிப்பு ஆலோசனையிலுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசிதழ் பதவில்லாத உத்தியோகஸ்தர்கள் உற்சாகமாக வேலை செய்யும் பொருட்டு, இந்தத் திட்டத்தைச் சீக்கிரம் அமல் நடத்த முடியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திறமையாக வேலை செய்ய, இது உற்சாகப்படுத்துவதாக, போதுமான அளவிற்கு இதைச் செய்யமுடியுமா என்பதை யோசிக்க வேண்டும். இப்பொழுதே கோப்புகளெல்லாம் விரைவாகச் செல்ல வேண்டுமென்ற அளவிற்கு எண்ணுவதால், பொது மக்கள் குறைபாடுகள் அதிகமாக இருப்பதால், இப்படி இரண்டு நாட்கள் விடுமுறை விட்டால், அரசின் காரியங்கள் நல்ல முறையில் நடக்குமா என்பதை யோசிக்க வேண்டும். அதைத்தான் யோசித்துக் கொண்டு இருக்கிறது என்று குறிப்பிட்டேன்.

THIRU T. MARTIN : In the Secretariat, many women are working. They leave their babies in the homes and come to the office and while working in the office they have to think of their babies in homes. In the circumstances may I request the Hon. Minister to state whether the Government will come forward to construct a creche here so that the babies may be kept here itself?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது அதைப்பற்றி யோசிப்பதற்கில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசாங்க ஊழியர்கள் அலுவலகங்களுக்கு காலை 9 மணிக்கே வரத்தயார் என்று அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்களா ? குறிப்பாக சென்னை தவிர மற்ற இடங்களில் காலை 9 மணிக்கு ஆரம்பித்தால் அவர்களாகவே அப்படி காலையில் வர முன் வந்தால், அதை அரசு ஏற்றுக்கொள்ள முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.